உ

ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி


''முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை''

அபிராமி பட்டர்

விக்கிரம வருடம் சித்திரை 1 வள்ளுவர் ஆண்டு 2031 (13-04-2000)

*வெளியீடு: 2*

*வெளியீடடாளர்கள்* *அருள்மிகு துர்காதேவி இந்து தேவஸ்தானம்*



மலர்: 1 இதழ்: 1

**7468 EDMONDS STREET BURNABY,BC V3N 1B2** **TEL: 604-521-3472**

உ
சிவமயம்

# விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமங் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தங் கை.

# ஆலயமும் நாமும்

அம்பிகை அடியார்களே!

துர்க்கா மஞ்சரியின் இரண்டாவது வெளியீட்டை தங்கள் கரங்களில் சமர்ப்பணம் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். எமது முதலாவது வெளியீட்டில் இம்மஞ்சரி மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் என்று கூறியிருந்தோம். தவிர்க்க முடியாத காரணங்களினால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஆனால் இனி எதிர்வரும் காலங்களில் இம்மஞ்சரி முன் கூறியது போல் தங்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கிடைக்கும். இம்மஞ்சரி மூலம் ஆலயத்தின் எதிர்கால நடவடிக்கைகளையும் எமது செயற் திட்டங்களையும் தங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதே எமது நோக்கம்.

எமது ஆலயத்தின் வளர்ச்சி பற்றி நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும் வெளிநாடுகளில் ஆலயங்களை அமைத்து அதை நிர்வகிப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பது தங்களுக்கு தெரிந்ததே. இந்த ஆலயத்தை பொதுமக்கள் ஆலயமாக்கிய போது வெறும் பத்தாயிரம் டொலர்களை திரட்டுவதற்கு நாம் எவ்வளவு கஷ்டப்பட்டோம் என்பது பொதுமக்களாகிய உங்களுக்கு தெரியும். ஆனால் எல்லாம்வல்ல அம்பிகையின் அருளால் இன்று நாம் ஆறு லட்சம் டொலர்கள் பெறுமதியான கட்டிடத்துடன் கூடிய காணியை எங்கள் ஆலயத்திற்கு வாங்கி நிர்வகித்துக் கொண்டிருக்கிறோம். அடியார்களாகிய நீங்கள் கொடுத்த உதவியாலும் ஒத்தாசையாலும் தான் இவ்வரிய காரியத்தை சாதிக்க முடிந்தது.
ஆலயத்திற்கான காணியை கொள்முதல் செய்த தொகையில் மூன்றில் இரண்டு பங்கு இன்னும் கடனாகவே உள்ளது. கிட்டத்தட்ட ஒரு லட்சம் டொலர்கள் தனிப்பட்டவர்களிடம் குறுகிய காலத் தவணையில் திருப்பிக் கொடுக்கும் வட்டியில்லா கடனாகப் பெறப்பட்டது. மிகுதி வங்கிக் கடனாகும்.

அம்பிகை அடியார்களே! ஆலயத்தில் இதுவரை 125 குடும்பத்தினர் அங்கத்தவர்களாக சேர்ந்துள்ளனர். இதுவரையில் அங்கத்தவராக சேராதோர் தங்களது பெயர்களை கொடுத்து இந்த ஆலயத்தில் அங்கத்தவராக சேரும்படியும், அங்கத்தவர்களாக சேர்ந்து சந்தாப்பணம் 15 டொலர்கள் மாதம் ஆலயத்தின் வளர்ச்சிக்கு கொடுத்து உதவும்படியும் கேட்டுக்கொள்கிறோம். அன்னையின் அடியார்கள் அனைவரும் ஒன்றாகி இத்தெய்வீகத் திருப்பணியில் பங்குகொள்ள வேண்டுகிறோம். இன்றைய அவசரத் தேவையான கடனை அடைக்கும் கடன் உங்களுடையது என்பதை மிகப் பணிவோடு உங்கள் நினைவுக்குத் தந்து, மனமுவந்து உங்கள் பங்களிப்புக்களைச் செய்து அருட்கடலான அன்னை துர்க்காதேவியின் அருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

உ
சிவமயம்

# நல்லூரான் திருவடி

(யோகர் சுவாமிகள்)

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி – கிளியே
இரவு பகல் காணேனெடி!

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி – கிளியே
நல்லூரான் தஞ்சமெடி!

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே
கவலை யெல்லாம் போகுமெடி!

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் – கிளியே
காவல் அறிந்திடெடி!

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே
ஆறுமுகம் தஞ்சமெடி!

சுவாமி யோக நாதன்
சொன்ன திருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னானெடி – கிளியே
பொல்லாங்கு தீருமெடி!

## சிந்தனைக்கு சிலவரிகள்

1. நான் என்ற எண்ணம் ஒருவனுக்குத் தோன்றுகிறதென்றால் அவன் தோல்விகளைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறான் என்று பொருள்.

2. அறிவு குறைவானவர்களுக்கே ஆணவம் வருகிறது. நிறை குடங்களுக்கு அது வருவதில்லை.

3. அடங்கி வாழ்ந்தால் ஆயுள்காலம் முழுவதும் ஓங்கி வாழலாம் என்பதே இந்துமதத்தின் சாரம்.

4. உனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையே "விதி" என்பதாகும்.

5. அறியாமல் செய்யும் தவறுகள் பாவங்கள் அல்ல. அவை வெறும் தவறுகளே. அவற்றிற்கு மன்னிப்பு உண்டு. அறிந்து செய்வது தவறல்ல. அது குற்றம். அதற்கு மன்னிப்புக் கிடையாது.

6. ஏற்றம் என்பது இறைவன் வழங்கும் பரிசு இறக்கம் என்பது அவன் செய்யும் சோதனை. உண்மையான பக்தனைத்தான் இறைவன் சோதிக்கிறான். சோதனைகளாலேயே மனம் மரத்துப் போய் பக்குவம் அடைகிறது – நன்றி அர்த்தமுள்ள இந்துமதம்
   – கவியரசு கண்ணதாசன்

7. ஒரு மனிதனின் துன்பத்தைப் பார்த்து மனமகிழ்ச்சி கொள்பவன் மற்றவரின் மகிழ்ச்சியைக் கண்டு பொறாமையினால் மனதிற்குள் அழுகின்ற மனம் கொண்டவன் மானிடத்திற்கே ஒரு சாபக்கேடு. பிணவாடை வீசுகின்ற நடமாடும் ஒரு சாக்கடை அவன்.

8. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
   பிற்பகல் தாமே வரும் (திருக்குறள்)
   முற்பகல் மற்றவர்க்குத் துன்பமானவற்றைச் செய்தால் அவ்வாறு செய்தவருக்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாக வந்து சேரும்..

க.ந

## பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அருள் மொழிகளிலிருந்து...

1. எங்கு நம்பிக்கை உள்ளதோ அங்கு அன்பிருக்கும். அன்பிருக்கும் இடத்தில் அமைதி இருக்கும். அமைதி இருக்கும் இடத்தில் வாய்மை (சத்தியம்) இருக்கும். சத்தியம் இருக்கும் இடத்தில் பேரானந்தம் இருக்கும். பேரானந்தம் இருக்கும் இடத்தில் தெய்வம் இருக்கும். ஆகவே நம்பிக்கையே பேரானந்தத்திற்கு ஆதாரம். அதுவே தெய்வத்தை உணரும் சாதனம்.

2. மனிதர்களில் சிலர் நாயை விட ஈனமானவர்களாகவும், மோசமானவர்களாகவும் இருக்கிறார்கள். நாய்க்கு ஒரு பசி, ஒரு பார்வை, ஒரு நோக்கம், ஒருவிதமான குரைப்பு இவைதான் உண்டு. அது நன்றி மறவாத மிருகம். ஆனால் மனிதன் பசிக்கேற்றவாறு எதையும் செய்கிறான். எல்லாப் பொருட்களையும் இரண்டு விதமாகப் பார்க்கிறான். சிந்தனையில் ஒன்றும், செயலில் ஒன்றுமாக இரண்டுவித நோக்கங்களோடு பழகுகிறான். அவன் பேச்சில் இரண்டுவித அர்த்தங்கள் இருக்கின்றன. சமயத்திற்கு தகுந்த மாதிரிப் பேசுகிறான். அவன் விரைவில் நன்றியை மறந்துவிடக்கூடியவன். நாய் தட்டில் நீங்கள் விட்டு வைத்த எச்சில் சோற்றை உண்டு நன்றியோடு பழகும். மனிதன் அமிர்தத்தைக் கொடுத்தால் கூட நன்றி சொல்ல மறந்துவிடுவான். நன்றியுடன் வாழ, விசுவாசமாகப் பழக, எளியவர்களிடம் அன்புகொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள். அது உங்களுக்கு நன்மை தரும்.

3. வங்கியில் உள்ள பணம் உங்களுடன் வராது. அதனைக்கொண்டு கருணையுடன் செய்த தர்மம் உங்களுடன் வரும். உங்களுடைய பதவியும், அதிகாரமும் நிலைத்திராது. ஆனால் அதைக் கொண்டு செய்த உதவி புண்ணியம் என்ற உருவில் உங்களுடன் வரும். புண்ணியம் என்ற நிலையான சொத்தைத் தேடிக்கொள்ளுங்கள். அடுத்த பிறவியிலும் அது உங்களைத் தொடர்ந்து வந்து நன்மைகளை அளிக்கட்டும். அதுவே உண்மை. உண்மையைத் தேடுவதே விவேகம்.

4. உலகப்பற்றையும், ஆசைகளையும் விட்டுவிடுங்கள். உலகத்தின் சங்கடங்கள் உங்களைத் துரத்தாது. நீங்கள் நிம்மதியாக வாழலாம்.

ஆசியுரை

# வன்கூவர் துர்க்காதேவி தேவஸ்தானம்
# வட அமெரிக்கா

அகில உலக நாயகியாக விளங்கும் அன்னை துர்க்காதேவிக்கு அனைத்துலக நாடுகளிலும் கோயில் எழுப்பி வழிபடுகின்ற சூழ்நிலையை இன்று நாம் காண்கின்றோம். இங்கிலாந்திலும் வட அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இன்று துர்க்கை வழிபாடு மேலோங்கி இருப்பதனை பெருமகிழ்ச்சியோடு அவதானிக்கிறோம்.

"எங்கெங்கு காணிலும் சக்தியடா

ஏழுகடல் அவள் வண்ணமடா" என்பது புதுமைக்கவி பாரதிதாசனின் கூற்றாகும். இதற்கேற்ப வட அமெரிக்காவின் மேற்குக் கடலை அண்டி இருக்கும் வன்கூவர் நகரத்தில் துர்க்காதேவிக்கு ஆலயம் எழுப்பி வழிபாடு செய்வது வரவேற்கத்தக்கது. இனம், மொழி, மதம் என்பதைக் கடந்து வாழும் மக்கள் மத்தியில் இத்தகைய சைவ எழுச்சி மிகவும் போற்றுதற்குரியது.

துர்க்காதேவி தத்துவ விளக்கத்துக்குரிய தெய்வம் ஆகும். மகுடாசுரமர்த்தனியாக எழுந்தருளி சிங்கவாகனத்தில் நின்று அவ்வசுரனை வதஞ்செய்கின்ற வரலாறு நவராத்திரி விழாவோடு தொடர்புபட்டதாகும். தமோகுணத்தின் பிரதிநிதியாகிய மகிடாசுரன் ரஜோகுணத்தின் சின்னமாக விளங்கும் துர்க்கைக்கு அடிபணியும்போது வெண்ணிறமாக விளங்கும் துர்க்கையின் கோலம் சாத்வீக குணத்தைக் காட்டுகிறது. இந்த நிலையில் வெற்றித் தெய்வமாக விளங்கும் துர்க்கையின் நாமமே கொற்றவை என்று பேசப்படுகிறது. அறியாமையையும் பகைமையையும் நீக்கி ஞானத்தையும் வெற்றியையும் நமக்கு அருளுகின்ற தெய்வமே துர்க்கை. துன்பத்தில் துர்க்கையை நினைத்தால் அதனைக் களைந்தும், பீதியைப் போக்கியும் அதே நேரத்தில் இன்பம் வேண்டி நினைத்தால் மங்களத்தை அருளியும் ஏழ்மை தரித்திரம் மற்றும் பயத்தையும் ஒழித்து அனைவருக்கும் உதவிடும் ஈரம் நிறைந்த நெஞ்சை உடையவள் துர்க்காதேவி.

"கந்தவீர மாகாளி கமல மங்கலை
கருணையான வடிவழகி கனிந்து வந்தனை
விந்தையாகி விளக்குமாகி விளங்கி வந்தனை
விண்ணுமாகி மண்ணுமாகி வெற்றி கண்டனை
மந்தமான புத்தியோட்டி மணமுந் தந்தனை
மலரில் வேதன் உன்னைப்பாட மயக்கம் தீர்த்தனை
சொந்தமான துர்க்கையம்மா இந்த நாள் முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்."

என்ற பாடலை உள்ளம் உருக ஓதி ஓதி எல்லாம்வல்ல துர்க்காதேவியை அனைவரது உள்ளத்திலும் இருத்துவோமாக.

எனவே வட அமெரிக்காவில் வன்கூவர் பட்டணத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அன்னை துர்க்காதேவி அனைவரையும் காப்பாற்றி அருளவேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன். இந்தத் தெய்வீகப்பணியில் ஈடுபடுகின்ற அனைத்துப் பெருமக்களையும் வாழ்த்தி வணங்குகிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி

# சமயவாழ்வு

நாங்கள் எல்லாம் வாழ்கின்றோம். என்ன வாழ்வு வாழ்கின்றோம் என்றால் பதிலே சொல்லமுடியாத அளவிற்கு வெட்கம் வருகின்றது. நாங்கள் வாழ்கின்ற வாழ்வு அவவாழ்வு. அவவாழ்வு என்றால் அற்பமான அழிகின்ற பொருள்களின் மேல் ஆசை வைத்து வாழ்கின்ற வாழ்வென்று பொருள். ஆசை வாழ்விற்கு அவவாழ்வு என்றே நேர் பொருள். ஆசை வாழ்வால் வருகின்ற இன்பம் சொற்பம். துன்பங்களுக்கெல்லாம் முதற் காரணம் ஆசை. இதை ஞானிகள் கூறிச் சென்றுள்ளனர்.

"ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பம்

ஆசைவிடவிட ஆனந்தமாமே" என்பது திருமந்திரம்.

ஆசையை விடவிட இன்பம் வருகிறது. அந்த இன்பம் பேரின்பம். ஆசையை விட்டவாழ்வு சிவவாழ்வு. அவவாழ்வு என்று இருப்பதால் சிவவாழ்வு என்பது இருப்பது தெரிகிறது. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்ற திருமுறைவாழ்வு சிவவாழ்வாகும். இந்த சிவவாழ்விற்கு எம்மை இட்டுச் செல்வது சமயம். மனிதன் சமயத்தோடு இசைந்து வாழவேண்டும்.

மனிதன்–சமயம்= விலங்கு

விலங்கு+சமயம்= மனிதன்

இவ்வாறு ஒரு சூத்திரத்தை திரு. வி. கல்யாணசுந்தரனார் நிறுவியுள்ளார். மனிதன் மனிதனாக வாழும்போது மேல் நோக்கிய வாழ்வையும் விலங்கு வாழ்க்கை வாழ்கின்றபோது கீழ் நோக்கிய வாழ்க்கையையும் வாழ்கின்றான். விலங்குகளை கால்நடை என்று அழைப்போம். மனிதனை அப்படி அழைப்பதில்லை. ஏன் மனிதனையும் கால்நடை என்று அழைக்கலாம்தானே! இல்லை. மனிதனை அப்படி அழைக்கக் கூடாது. காரணம் விலங்குகள் காலால் மட்டும்தான் நடக்கின்றன. ஆனால் மனிதனோ காலாலும் நடந்து கொண்டு மனத்தாலும் நடக்கின்றான். நாவாலும் நடக்கிறான். சிலவேளைகளில் தலையாலும் நடக்கின்றான். விலங்குக்கு மனநடை நாநடை இல்லை. இது இல்லாததால் தான் விலங்கை வாயில்லாப் பிராணி என்றும் அழைப்பர். மனிதனுக்கு நடை பலவகைப்படுவதற்குக் காரணம் மனம் என்ற ஒன்று மனிதனிடம் இருப்பதுதான் காரணம். மனிதர்களை மானிடர் என்றும் அழைப்பர். மான்+இடர்=மானிடர் என்றாகும். மான் துள்ளுகின்ற இயல்புடையது. இடர் என்றால் துன்பம் என்று பொருள். மானிடர் என்றால் துன்பத்தை நோக்கி துள்ளி ஓடுகின்ற இயல்பினர் என்று கருத்து.

"மான் என்பதறிந்து போன மானிடர் ஆவர் மீண்டும் யான் என்பதறிந்தால் வாரார்" என்பது கம்பராமாயணம். இதற்கு கம்பராமாயண விளக்கம்; பொய்யான மானான மாரீசனை பின் தொடர்ந்து உண்மையான மான் என்று சென்ற மானிட அற்ப பயல்களான இராமரும் இலக்குவணனும் உன்னை கவர்ந்து வந்தது இராவணேசன் என்று அறிந்தால் மீண்டும் திரும்பி உன்னை சிறை மீட்கவரமாட்டார்கள் என்பதாகும். இதற்குள் உள்ள ஆத்மீக விளக்கம் பொய் மானை உண்மையான மான் என்று துள்ளியோடிய மானிடர்கள் யான் என்பது அறிந்தால்– நான் ஆர்? என் உள்ளம் ஆர்? என்ற ஆத்மீக ஆராய்ச்சி செய்து 'யான்' என்றால் என்ன என்பதை அறிந்தால் மீண்டும் பொய்யான மாரீச மயக்கத்தை விட்டுக்கலையார் என்பதாகும் இதனை;

'யானாகிய என்னை விழுகி வெறும்

தானாய் நிலை நின்றது தற்பரமே; என்னும் அருணகிரியார் அனுபவ வாக்கினால் உணரலாம்.

சிவபெருமான் இடது கையில் மானைப் பிடித்துள்ளார். மனிதனின் மனம் அடங்கினால் சிவனை அடையலாம் என்பது இதன் தத்துவம்.

"மங்கையைப் பாகம் வைத்தார்

மான் மதி முழுவும் வைத்தார்" என்பது தேவாரம்.

'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்' என்பது ஆன்றோர் வாக்கு.

மனம் இலகுவானது. இலவம் பஞ்சை ஒத்தது. இலவம் பஞ்சு காற்றைக் கண்டால் உடனே எழுந்து பறக்கும். அதேபோல் இலவம் பஞ்சு போன்ற மனமும் ஆசையாகிய காற்றைக் கண்டால் பறந்து செல்லும். இந்தப் பறப்பினால் மெஞ்ஞான மறப்பு வருகிறது.

'பப்பற வீட்டிருந்து உணரும் நின் அடியார்' என்பது திருவாசகம். 'பப்பற' என்றால் பரபரப்பு அற என்பது கருத்து. பரபரப்பானது மனத்தோடு சம்பந்தப்பட்டதாகும். இந்த பரபரப்பு நீங்கினால் திருவருள் அருள் கூட்டும். ஆகையினாலே மனத்தை ஆசைகளிடத்துப்படாமல் காக்கவேண்டும்.

பஞ்சைத்திரித்தால் நூல் வரும் அந்த நூல்களை ஒன்று சேர்த்துத் திரித்தால் கயிறு வரும். அந்தக் கயிறுகளை ஒன்று சேர்த்துத் திரிக்கின்றபோது வடம் வரும். வடத்தினைக் கொண்டு தேரினை இழுக்கலாம். பஞ்சைக்கொண்டு தேரினை இழுக்கலாமா? ஆகையினாலே பஞ்சு நிலையில் இருக்கும் மனத்தை வடத்தினுடைய நிலைக்கு கொண்டு வரவேண்டும். எனவே பஞ்சு மனத்தை திரிக்க வேண்டும்.

"என்னே என் மனந் திரித்த இவன் யாரோ"! என்பது தெய்வச் சேக்கிழார் திருவாக்கு.

நைலோன் என்னும் செயற்கை நார் கொண்டு திரித்தவலையில் மீன்படும். மனம் உருவாக்கும் பத்தி என்னும் இயற்கை நார் வலையில் இறைவன் படுவான்.

'பத்திவலையில் படுவோன் காண்க' என்பது திருவாசகம். திருவாசகம் சொல்லும் பத்திவலையை எங்கும் காசு கொடுத்து வாங்கமுடியாது. பிரார்த்தனை ஒன்றினாலேதான் இதனை அடையமுடியும். இதற்கு மாணிக்கவாசகர்;

'கூத்தானை நாத்தழும்பேற வாழ்த்தி' என்று உபாயம் சொல்கின்றோம். இவ்வுபாயமே எமக்கு வருகின்ற அபாயங்கள் எல்லாவற்றையும் நீக்கவல்லது. மனித உடலிலே எங்கு அடித்தாலும் தழும்புவரும். எங்கு கடித்தாலும் தழும்புவரும். ஆனால் நாக்கிலே அடித்தாலும் வராது கடித்தாலும் வராது. இப்படியாக நாக்கின் அமைப்பை இறைவன் படைத்துள்ளான். நாக்கிலே தழும்பு வராத இந்த விடயம் எமக்குத் தெரிந்தளவிற்கு மணிவாசகருக்குத் தெரியாமல் இல்லை. அவருக்கும் தெரியும். இருந்தும் பிரார்த்தனை சமயவாழ்விற்கு மிகமிக முக்கியம் என்பதற்காக 'கூத்தானை நாத்தழும்பேற வாழ்த்தி' என்று உரமாக ஒரு வேண்டுகோளை முன்வைத்தார். இந்தக் கருத்தோடு இசைந்து அருணகிரியார்;

'நாமேல் நடவீர்! நடவீர் இனியே' என்கிறார்.

'நாராயணா என்னா நாவென்ன நாவே' என்கிறது சிலப்பதிகாரம்.

ஒரு வயதுபோன ஆசிரியர் தளர்ந்த வயதிலேயும் கோயில் குளம் என்று உற்சாகமாகத் திரிவார். அவரின் இந்த உற்சாகத்தைக்கண்டு ஒரு சிறுவன் தாத்தா! தாத்தா!! உங்களுக்கு என்ன வயது என்று கேட்டான். அதற்கு அந்த தாத்தா "பதினாறு வயது" என்று சொன்னார். அதற்கு அந்தச் சிறுவன் உங்கள் பேத்தியின் வயதைக் கேட்கவில்லை உங்கள் வயதைத்தான் கேட்டேன் என்றான். அதற்கு அந்த ஆசிரியர் என் வயதைத்தான் கூறினேன் என்று கூறிச்சிரித்தார். சிறுவன் கிழவரின் இந்த பதிலைக்கேட்டு சற்று யோசித்தான். கிழவரே பின் பதிலைச் சொன்னார். நான் கடந்த பதினாறு ஆண்டுகள்தான் இறைவனை நினைத்து சிவவாழ்வு வாழ்கின்றேன். அதற்கு முந்திய வாழ்வனைத்தையும் சிவசிந்தனையற்று

அவவாழ்வாய் வீணே கழித்துவிட்டேன். அது அப்படியே தொலைந்த வாழ்வாய் போய்விட்டது என்று. சிறுவன் இந்தப்பதிலைக் கேட்டுப் பூரிப்பு அடைந்தான். இந்தக் கருத்துப்பட அப்பரடிகள்;

"ஈசனைப் பேசா நாளெல்லாம்
பிறவா நாளே" என்று பாடுகிறார்.

"பிறந்து மொழிபயன்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்"
என்பது காரைக்கால் அம்மையாரின் உண்மை உரை.

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்ற குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் "சேர்ந்தல் ஆவது இடைவிடாது நினைத்தல்" என்று பொருள் எழுதினார். 'ஈசனைப் பேசுவதும்' 'சேர்ந்தாலும்' ஒரே கருத்து ஆகும்.

எல்லாக் கடலுக்கும் கரை இருக்கிறது. ஆனால் பிறவிக் கடலுக்கு மட்டும் கரையில்லை. வள்ளுவர் பிறவியை கடல் என்று சும்மா சொல்லாமல் பிறவி பெருங்கடல் என்று அதன் விஸ்தீரணம் கருதி அடைகொடுத்தார். ஆனால் அருணகிரிநாதரோ; 'முடியாப் பிறவிக்கடல்' என்று பிறவிக்கடலைப் பார்த்து அதன் கரைகாணாது அமைந்து பயப்பட்டு பாடுகிறார். இந்தப் பயத்துக்கான காரணம் அருணகிரியார் பல பிறப்பெடுத்து துன்பப்பட்டவர். அருணகிரிநாதர் அனுபவஸ்தர். அவர் பாடிய பாடல்களில் அநுபூதி என்பதும் ஒன்று. இதனால் அவரின் அனுபவம் விளங்கும். 'ஏழுகடல் மணலை அளவிடல் அதிகம் என திடர் பிறவி அவதாரம்' என்று தன் பிறவி வரலாற்றை அனுபவத்தில் இருந்து பாடியவர். வள்ளுவர் பிறவிக்கடலுக்குள் விழுந்தவர்களைப் பார்த்துத்தான்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார்; நீந்தார்
இறைவனடி சேராதார்" என்று சொன்னார். ஆனால், அருணகிரியார் பிறவிக்கடலின் கரையில் நிற்பவர்களைப் பார்த்து;

'முடியாப் பிறவிக் கடலிற் புகார் முழுதுங் கெடுக்கு
மிடியாற் படியில் விதனப்படார் வெற்றிவேற் பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான் அவுணர் குலமடங்க
பொடியாக்கிய பெருமான் திருநாமம் புகழ்பவரே!'

என்று அறிவுரையாக சொல்லுகிறார்.

மேலே சொன்ன பல நல்ல கருத்துக்கள் எல்லாம் சமய வாழ்வு வாழ்ந்திட பிரார்த்தனை இன்றியமையாதது என்பதனைக் காட்டி நிற்கின்றது. ஆதலினாலே நாம் எல்லாம் இறை நாமத்தைச் சொல்லி இன்புபற்று வாழ்வோம்.

வடிவேலு ஞானகாந்தன்

# மாமன் மாமி மெச்சிய மருமகள்

கௌரி நல்ல இடத்துக் குடும்பப் பெண். திருமணநாள் அன்றுதான் தனது கணவனைக் கண்ணால் கண் குளிரக் கண்டாள். கணவனைக் கைப்பிடித்து அவன் பின்னே சென்றவள் பிறந்தகம் வரவே இல்லை; வரவேண்டிய சந்தர்ப்பம் நேரவில்லை.

ஒரே நாளிலேயே தன்னை நூற்றுக்கு நூறு நம்பி தன் பின்னே வந்த மனைவியைக் கணவனும் அவளுக்கு எவ்வித துரோகமும் செய்யாது கண்ணுக்குக் கண்ணாகப் பாதுகாத்து வந்தான். உற்றார், உறவினர், சுற்றம், தாய் தந்தை, சகோதரர் என்று இத்தனை பேரையும் கழுத்தில் மூன்று முடிச்சு ஏறிய உடனே மறந்து கணவனே கதி என்று வந்தாளே அவளைக் காப்பாற்றுவதும் அவளது நம்பிக்கைக்குப் பங்கம் விளையாமல் நடப்பதும் தமது முக்கிய கடன் என்று கணவன் புரிந்து கொண்டான்.

கௌரியும் கணவனே கண் கண்ட தெய்வம் என்பதை உள்ளத்தில் கொண்டு கணவனது மனம் கோணாமல் நடக்கப் பழகிக் கொண்டாள். தனக்கென்று சில கொள்கைகளை கௌரி வைத்துக் கொண்டாளாயினும் கணவனுக்காக அவை அத்தனையையும் விட்டுக்கொடுத்து வாழ்ந்தாள்.

தன் தாய் தந்தையரை நேசிப்பது போலவே மாமன் மாமியரை நேசித்து வந்தாள் கௌரி. கௌரியின் தாய் தந்தையர் இடையிடையே மகளைப் பார்க்க வருவர். அவள் புக்ககத்தில் மகிழ்வோடு இருப்பதைக் கண்டு தமது இல்லத்திற்கு அழைத்துச் செல்வதையும் மறந்துவிட்டனர். கௌரியும் பிறந்தகத்திலும் புக்ககமே தனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தால் வீடு செல்லவேண்டும் என்ற நினைவையும் இழந்திருந்தாள்.

ஒருநாள் கணவன் கௌரியைப் பார்த்து "உனக்கு உனது வீட்டிற்குச் செல்லவேண்டும் என்று ஆசை ஏற்படவில்லையா?" என்றார். எனது பிறந்த வீட்டிலும் பார்க்க புகுந்த வீட்டில் எல்லாவித சௌகரியங்களும் கூடுதலாக இருக்கின்றன. அதற்கும் மேலாக நீங்கள் இருக்கும் இடமே எனது சொர்க்கம் என்றாள் கௌரி.

தனது மனைவியின் வார்த்தைகளை மனதுள்ளே மெச்சிக் கொண்ட கணவன் அதன் பின்பு கௌரியின் பிறந்த அகத்தைப் பற்றி நினைவூட்டுவதே இல்லை.

ஒருநாள் மத்தியானம் வீட்டில் ஒருவரும் இல்லை. கௌரியின் மாமனும் மாமியும் மாத்திரம் இருந்தனர். மத்தியானச் சாப்பாட்டின்மேல் கௌரி இருவருக்கும் வெற்றிலை இடித்துக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அத்தருணத்தில் மாமியார் மருமகளே! "உனக்கு உனது வீட்டிற்குச் சென்று அப்பா அம்மாவைப் பார்க்க ஆசையில்லையா?" என்று கேட்டார். கௌரி புன்னகை பூத்தவளாய், நீங்கள் இருவரும் எனது அப்பாவும் அம்மாவுமாய் இருக்கும்போது நான் வீட்டிற்குச் சென்று எந்த அப்பாவையும் அம்மாவையும் பார்க்கப் போகிறேன் என்றாள். மருமகளின் அன்பு வார்த்தைகளைக் கேட்டு மாமனும் மாமியும் மெழுகாய் உருகிப்போயினர்.

ஒருநாள் கணவனின் தமையனான மைத்துனர், கௌரியைப் பார்த்து இங்குள்ள இட்டல் இடைஞ்சல்களைப் பற்றியாவது உனது வீட்டில் பேசிக்கொள்ள ஆசை வருவதில்லையா? என்று கேட்டார். இதைக் கேட்ட உடனேயே அவளது முகம் முன்னிலும் பிரகாசம் அடைந்து நீங்களோ இக்குடும்பத்தின் நியாய தேவதையாக விளங்குகிறீர்கள்! என் அக்காளோ உங்களுக்கேற்றவளாக விளங்கும்போது இக்குடும்பத்தில் என்னதான் சலசலப்பு ஏற்படப்போகின்றது. இக்குடும்பத்தில் உள்ள அத்தனை பேருமே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் உதவியாக வாழுகின்றனர். இதனைவிட நமக்கு வேண்டிய சுவர்க்கம் வேறு எதுதான் வேண்டும்?

கௌரிக்குப் பக்கத்து வீட்டில் ஒரு தோழி, யாருமில்லாத நேரத்தில் கௌரியின் பேச்சுத் துணைக்கு வருவாள். கௌரியின் மனோநிலையை அறியப் பலமுறையும் முயற்சி செய்து தோல்வி கண்டவள். இருந்தாலும் கௌரி எல்லாரையும் விட மகிழ்ச்சியோடிருப்பது தோழியின் மனதில் ஒரு பொறாமையை உண்டாக்கியது.

எப்படியும் அக்குடும்பத்தினுள் ஒரு புயலை உண்டாக்க வேண்டும் என்று தோழி விரும்பினாள். கௌரியின் பேச்சும், செயலும், உள்ளமும் தோழியின் சூழ்ச்சிக்கு இடம் கொடுக்கவில்லை. ஒருநாள் தோழி கௌரியைப் பார்த்து நீ புக்ககத்திற்கு வரும்போது என்னதான் சீர்வரிசைகள் கொண்டு வந்தாய்? ஒன்றுமில்லாதவளாய் வந்தாய். அவர்களுக்கு அடிமையாகி வாழ்கிறாய். இதுதானே உனது சரித்திரம்? உனக்கு இங்கே என்னதான் சுதந்திரம் உண்டு. இந்த அடிமைத்தனத்தை நீ எப்படித்தான் ஜீரணிக்கிறாயோ தெரியவில்லையே என்று கூறினாள் தோழி.

நித்திரையாகியிருந்த மாமனும் மாமியும் இச்சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே விழித்திருந்தனர். கௌரியின் பேச்சைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

தோழியே, என் இல்லத்தின் முன்பாகத்தில் மாமரங்கள் பூத்து நிற்கின்றன. பின்பகுதியில் மலர்க்கொடிகள் என் வாழ்விலும் மணங்கமழப் படர்ந்திருக்கின்றன. கறுத்தக்கொழும்பான் மாம்பழத்தை உண்டது போல இன்பம் அடைந்திருக்கிறேன். என் வாழ்விலும் உள்ளும் புறமும் அதேபோல மகிழ்ச்சி பூத்துக் குலுங்குகிறதடி.

நானோ பிறந்த வீடு அறியேன். எல்லாரும் ஏன் போகவில்லை என்கிறார்கள். பிறந்த வீட்டுச் சுகத்திலும் பார்க்க இங்கே கூடிய சுகத்தை அனுபவிக்கிறேன். அப்பா அம்மா சகோதரர்களும் அடிக்கடி வந்து போகின்றனர். எனக்கு என்னதான் குறை? பிறந்தகம் ஏன் போகவில்லை? என்னதான் கொண்டுவந்தாய்? கணவனைச் சொக்குப் பொடி போட்டுக் கையினுள்ளே வைத்திருக்கிறாள் என்று அயலார் கூறும் நச்சரிப்புத்தான் தாங்கவில்லை. இவர்களுடைய நச்சரிப்புக்காகவாவது ஒருமுறை பிறந்தகம் போய் வரலாமோ என்றும் யோசிப்பதுண்டு.

எனது தாயுந் தந்தையும் எனது தெய்வமும் இந்த வீட்டிலேயே இருக்கும் போது எனக்கென்ன குறை? யாராவது சொல்லிவிட்டுப் போகட்டுமே. அவர்கள் வார்த்தைகளைக் கேட்பதில் செவிடியாகவும் அவர்களோடு வார்த்தைகளைப் பேசுவதில் ஊமையாகவும் இருக்கின்றேன்.

தோழி, அக்கம் பக்கத்தார் எனது உள்ளத்தை அறியாதவர்கள். அவர்களது பொறாமையும் பேராசையும் அவர்களது கண்களை மறைத்துவிட்டன. பிறர் கஷ்டப்படுவதைக் கண்டு மகிழ்வதில் சிலருடைய மனம் பழக்கப்பட்டிருக்கின்றது.

எனக்கு என்னடி குறைச்சல்? எனக்கு இந்தப் புக்ககத்தைவிடவா ஒரு பொக்கிஷம் வேண்டும்? என் மாமனார் ஆயிரம் பவுண் நகைகளுக்கு ஒப்பானவர். என் மாமியோ அன்புப் பெட்டகம், அன்புக் களஞ்சியம். நான் எவ்வளவு பாக்கியசாலி. என் மூத்த மைத்துனர் நியாயதேவதை. அவருக்கு வாய்த்தவள் இருக்கிறாளே என் ஓரகத்தி அவள்தான் அடுக்களைத்தலைவி. சாட்சாத் அன்னபூரணியேதான்.

என் இளைய மைத்துனர்களும் அவர்களுடைய மனைவிகளும் யானைக்குத் தந்தங்களும் அவற்றை அலங்கரிக்கும் குஞ்சலங்களும் போல என் குடும்பத்தைச் சோபிக்க வைக்கிறவர்கள். பண்பின் பிறப்பிடங்கள்.

தோழியே, என் மகன் எங்கள் குலவிளக்கு என் மருமகள் அந்த விளக்கின் ஜோதி. என் மகள்தான் என் விரலுக்கு வைர மோதிரம். அதன் வைரங்கள் எங்களுக்கு வாய்த்த மருமகப்பிள்ளைகள் என் நாத்திமார்கள் அழகிய ரவிக்கைகளைப் போல் என் மனசு மகிழ என்னோடு ஒட்டியிருக்கிறார்கள். என் கணவர்தான் என் நெற்றித் திலகம். தலைவகிட்டின் சிந்தூரம். என் மாங்கல்ய சின்னம். என் சக்களத்தி என் குழந்தைகளைப் பேணி வளர்க்கும் நல்ல தாய்.

இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு படுத்திருந்த மாமன் மாமி இருவரும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். இருவரும் அப்படியே பூரித்துப் போனார்கள். வாய் திறந்து பின்வருமாறு கூறினர். "நாங்கள் முற்பிறப்பில் செய்த பெருந்தவமடி பெண்ணே உன்னைப் போன்ற உத்தமியை மருமகளாகப் பெற்றிருக்கிறோம்" என்றார்கள்.

இப்படியும் இக்கலியுகத்தில் ஒரு குடும்பம் உண்டா? என்று நீங்கள் கேட்பது என் காதிலும் விழுகின்றது. ஒரு குடும்பத்தை உதாரணமாக வைத்தே இது எழுதப்பட்டது. இப்படி எத்தனையோ குடும்பங்கள் உண்டு. இவர்களால்தான் உலகம் நிலைபெற்று நிற்கிறது.

# சொல் எச்சச் சொற் புதிர்

கீழ் உள்ள சொற்கள் எல்லாம் இப்புதிருள் உண்டு. அவை எவ்விதத்திலும் இருக்கும் மேல், கீழ் –இடம், வலம் –குறுக்கு, மறுக்கு –முன், பின் என்றபடி. எல்லாச் சொற்களையும் கண்டுபிடித்து வட்டம் இடவும். மிகுதியாய் உள்ள எழுத்துக்கள் ஒரு அற்புதச் சொற்தொடர். அதைக் கீழ் எழுதவும்.

--- -- ------

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | க | ட | க | வி | வி | யா | ள | ன் | கணபதி, விநாயகர், விக்நேஸ்வரர், |
| நா | அ | மை | ளி | ரு | தை | ள் | அ | கா | பிள்ளையார், கணேசன், ஐங்கரன், |
| ய | ட | ள் | ள் | க | ங் | தி | க | ர் | ஆதி, அரன், கவிஞன், கார்த்திகை, |
| க | வெ | தி | மி | டை | கு | சி | ர | த் | பரமன், சிவலிங்கம், சிற்பி, ஞாயிறு, |
| ர் | க | ப | ர | ம | ன் | வ | ம் | தி | திங்கள், செவ்வாய், புதன், வியாளன், |
| தி | க் | ண | இ | டை | ஸ் | லி | ன் | கை | வெள்ளி, சனி, திகதி, பக்தி, |
| தி | து | க | ர் | நே | க் | ங் | ச | கா | கடமை, விதி, கதி, மதி, அகரம், |
| ன் | த | பு | கி | வி | தி | க | ணே | சி | கதை, கடை, இடை, விகடகவி. |
| ய் | க | க் | ஞா | க | ம | ம் | க | ற் | |
| வா | வி | ச | யி | ர் | யா | ளை | ள் | பி | |
| வ் | ஞ | னி | று | ஐ | ங் | க | ர | ன் | |
| செ | ன் | தே | ஆ | தி | வி | ன் | ர | அ | |

-------------------------------------------

யோக நகை

தாய் (தன் கணவனைப் பார்த்து) : 'நம் பிள்ளைகள் இரண்டுபேரும் விடிய எழும்பின உடனே தாங்களாயே கடவுளைக் கும்பிட்டு யோகாசனங்கள் செய்யுதுகள், நல்ல பழக்கம் பழகிவிட்டுதுகள், நாவூறு படாமல் இருக்கவேண்டும்.'

அதற்குத் தந்தை : 'நீ, என்ன மறந்து விட்டியே, இன்றைக்கு இரண்டு பேருக்கும் மிற்றேம் சோதனை, அந்தப் பயத்திலையல்லோ கடவுளும் யோகமும் எல்லாம் தானே வருகுது.

-------------

ஒரு முறை சென்னைப் பட்டணத்தில் ஒரு ஓட்டோ டாக்சிச் சாரதியும் ஒரு பிரசங்கியும் ஒரே நாளில் மரணமானார்கள். தேவுலக வாசலை அடைந்ததும் சித்திரபுத்தனார் ஓட்டோ சாரதியை

உடனே உள் அனுப்பிவிட்டு யோகப் பிரசங்கியை போய் வரிசையில் நில்லும் இடம் கிடைத்ததும் உள்ளுக்கு விடலாம் என்றார். பிரசங்கி ஆச்சரியத்துடன் கேட்டார், 'நான் ஒரு கிழமைதனும் தவறாமல் ஒவ்வொரு வெள்ளியும் கோயிலில் யோகத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்து வந்தேன். அவனோ ஒரு நாளும் கோவிலிற்கோ வந்ததில்லை. அப்படியிருக்க அவனுக்கு எப்படி முதல் இடம் கிடைத்தது? என்று வினாவினார். அதற்கு சித்திரபுத்தனார், 'நீர் கோயிலிற் பிரசங்கம் செய்யும் பொழுது எல்லாரும் தூங்கி வளிஞ்சினம். அவன் ஓட்டோவை ஓட்டும் பொழுது எத்தனை பேர் எத்தனை தரம் 'கடவுளே! கடவுளே!' என்று தம்மை மறந்து கத்தியிருக்கினம் என்பது உமக்குத் தெரியாதா?'

## திரு அருட்பா
### இராமலிங்க அடிகளார்

ஒருமையுடன் நின துதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நின துபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்ட டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

சுபம்